**16.10.2024**

புதுக்கோட்டை ஜெ.ஜெ.கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி) இளையோர் செஞ்சிலுவைச் சங்கமும் நாட்டு நலப்பணித்திட்டமும் இணைந்து 16.10.2024 அன்று இரத்ததான முகாம் நடத்தியது.

ஒவ்வொரு கல்வியாண்டும் இரண்டு இரத்ததான முகாமை கல்லூரியில் நடத்துவது வழக்கம். இன்று அவசர தேவையின் நிமித்தம் இந்த இரத்தான முகாம் நடத்தப்பட்டது. இதனை மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனையின் மருத்துவர் கௌதம் அவினாஷ் முகாமை நடத்தினார். அவருடன் மருத்துவமனையின் இரத்த வங்கியின் மேலாளர் ரவி முகாமை முன்னெடுத்தார்.

இம்முகாமில் 52 ஆசிரியர்களும் மாணவர்களும் இரத்ததானம் செய்தனர். இரத்ததானம் செய்தவர்களை ஜெ.ஜெ. கல்விக் குழுமத்தின் செயலர் நா.சுப்பிரமணியன், கல்லூரி முதல்வர் முனைவர் ஜ.பரசுராமன் ஆகியோர் பாராட்டினர். அதனைத் தொடர்ந்து கல்லூரியின் நுண்ணுயிரியல் துறையும் மீனாட்சி மிஷன் மருத்துவமனையும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டது. இதில் மருத்துவமனையின் நிர்வாக இயக்குநர் அழகுமுனியும், கல்லூரியின் முதல்வரும் கையொப்பம் இட்டனர். இதனால் கல்லூரியில் பயிலும் இளநிலை, முதுநிலை நுண்ணுயிரியல் மாணாக்கர்கள் நேரிடை இணைப்பு நிலையில் (Internship) பருவ நீள்விடுப்புக் காலங்களில் மருத்துவமனையில் பயிற்சி பெறும் வாய்ப்பினைப் பெறுகின்றனர்.

இம்முகாமிற்கான ஏற்பாட்டினை செஞ்சிலுவை சங்க அலுவலர், நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர்கள் செய்திருந்தனர்.